# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/39—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/39 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. அ. எண் : டபிளியு 68(70)/76.*

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

*பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியினாலாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**வி. கொபல்லவ,**
***சனாதிபதி.***

**சனாதிபதியின் அலுவலகம்,**
**கொழும்பு,**
**1976 ம் ஆண்டு திசெம்பர் மீ 17 ந் உ.**

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், அவசரகால (தனியார்துறை வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி) பற்றிய ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக, ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இந்த ஒழுங்குவிதிகளால் வழங்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட தத்துவம், பணி அல்லது கடமை எதனையும், தொழிற்றிணைக்களத்தின் அலுவலர் எவருக்கும், அத்தகைய அதிகாரி கையளிக்கலாம்.

3. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளானவை, எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில், அல்லது வேலைக்கமர்த்துதல் தொடர்பிலான வாய்மொழி மூலமான, எழுத்திலான, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஒப்பந்தத்தில் உள்ள எது எப்படியிருப்பினும், வலுவும் பயனுமுடையனவாதல் வேண்டும்; அதற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டம் அல்லது ஒப்பந்தத்துக்கும் இடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை எதுவும் நேருமிடத்து, அத்தகைய சட்டம் அல்லது அத்தகைய ஒப்பந்தம் எதனையும் விட இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறும் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், தொழில் எதிலும் இருபத்தைந்து வேலையாட்களுக்குக் குறையாதவர்களை வேலைக்கமர்த்தியுள்ள தொழில் தருநர் ஒவ்வொருவரும், ஒரு மாதத்தில் எண்ணூறு ரூபாவை விஞ்சாத மொத்தச் சம்பாத்தியமுடைய வேலையாள் ஒவ்வொருவருக்கும், 1976 சனவரி மாதம் உட்பட ஒவ்வொரு மாதம் தொடர்பிலும், பதினைந்து ரூபாவுக்குக் குறையாத ஒரு படியைக் கொடுத்தல் வேண்டும் :

ஆயின்—

(அ) அத்தகைய தொழில்தருநர், தேயிலை வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழிலில், அல்லது இறப்பர் வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழிலில், அல்லது கொக்கோ, ஏலம், மிளகு ஆகியன வளர்த்தல், உற்பத்தி செய்தல் தொழிலில், அல்லது தென்னை வளர்த்தல் தொழிலில், அல்லது கறுவா அல்லது புகையிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவரான தொழில்தருநராக இருக்குமிடத்து, கொடுக்கற்பாலதான படியானது, அம்மாதத்தின் போது வேலைசெய்த நாட்களின் எண்ணிக்கைக்கான கூலியாக அத்தகைய வேலையாளுக்குக் கொடுக்கற்பாலதான தொகையின் ஆறு சதவீதமாக, அல்லது பதினைந்து ரூபாவாக, இவ்விரண்டில் எது குறைவானதோ அதுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய படியானது, அத்தகைய தொழில் தருநரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது கொடுக்கற்பாலதாதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய தொழில்தருநர் கூட்டுறவுச் சங்கமொன்றாக இருக்குமிடத்து, அப்படியானது, அத்தகைய தொழில்தருநரால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது கொடுத்தற்பாலதாதல் வேண்டும் ; அத்துடன் அமைய வேலையாளொருவரின் விடயத்தில் அம்மாதத்தில் அவர் வேலைசெய்துள்ள நாட்களினது எண்ணிக்கையின் விகிதாசாரப்படி கொடுக்கற்பாலதாதல் வேண்டும்.

(2) துண்டுவீத அடிப்படையில் அல்லது நாள்வீத அடிப்படையில் வேலையாளொருவர் வேலைக்கமர்த் தப்பட்டுள்ளவிடத்து, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான தொகையானது, விடயத்துக்கேற்றவாறு துண்டுவீத அடிப்படையில் அல்லது நாள்வீத அடிப்படையில் அவருக்குக் கொடுக்கற்பாலதான கூலியின் ஆறு சத வீதத்திற்குக் குறையாத பணத்தொகையாயிருத்தல் வேண்டும் ; எவ்வாறாயினும், இப்பந்தியின்கீழ் கொடுக்கற் பாலதான, தொகை மாதமொன்றிற்கு பதினைந்து ரூபாவை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(3) மாதத்தில் எண்ணூறு ரூபாவை விஞ்சுகின்றதும், ஆனால் எண்ணூற்றித் தொண்ணூறு ரூபாவுக்குக் குறைந்ததும் ஆன மொத்தச் சம்பாத்தியத்தையுடைய வேலையாளொருவரின் தொழில்தருநர் ஒவ்வொருவரும், 1976 சனவரி மாதம் உட்பட ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் அம்மாதத்தில் வேதனமாக அல்லது கூலியாக அத்தகைய வேலையாளால் பெறப்பட்ட தொகைக்கும் எண்ணூற்றித் தொண்ணூறு ரூபாவுக்கும் இடையிலான வித்தியாசத் திற்குச் சமமான தொகையொன்றினை அத்தகைய வேலையாளுக்குப் படியாகக் கொடுத்தல் வேண்டும்.

5. இவ்வொழுங்குவிதிகளின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், அவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள படியானது—

(அ) 1967 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டு உடன்படிக்கை எவ்வேலையாளுக்கு ஏற்புடைத்தா கின்றதோ அவ்வேலையாளுக்கு ;

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கூட்டு உடன்படிக்கையின்கீழ் கொடுக்கற்பாலதான தொகையிலும் பார்க்க வாய்ப்புக் குறைந்தனவாகவில்லாத கூலியையும் வாழ்க்கைச் செலவுக்கான மீள நிகழாப் பணிக்கொடையையும், தொழில்தருநர், தன்னிச்சையாக அல்லது வேறுவிதமாக எவ்வேலையாளுக்குக் கொடுக்கின்றாரோ, அவ்வேலையாளுக்கு ;

(இ) தொழில்தருநர் கொழும்புப் பாவனையாளர் விலைக்குறியீட்டெண்ணுக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படியைத் தொழில்தருநர் எவ்வேலையாளுக்குக் கொடுக்கின்றாரோ, அவ் வேலையாளுக்கு ;

(ஈ) 1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட தருமநிலையமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாளுக்கு ;

(உ) எவ்வேலையாளின் தொழில்தருநர், 1971 ஆம் ஆண்டு செத்தெம்பர் 10 ஆம் தேதிய 14,975 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட ஏதேனும் கூட்டு உடன்படிக்கை தொடர்பில், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 10 (2) ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றினால் பிணிக்கப்பட்டுள்ள துடன், அத்தகைய உடன்படிக்கைகளின் நியதிகளின்படி கூலிகளும் வாழ்க்கைச் செலவுக்கான மீளநிகழாப் பணிக்கொடையும் கொடுக்கின்றாரோ, அத்தகைய தொழில்தருநரால் வேலைக்கமர்த் தப்பட்டுள்ள வேலையாட்களின் எண்ணிக்கை இருபத்தைந்து பேர்களுக்குக் குறைவானதாக இருக்கு மிடத்து, அவ்வேலையாளுக்கு,

கொடுபடற்குரியதாதலாகாது.

6. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் எந்தத் தொழிலிலுமுள்ள வேலையாள் எவருக்கேனும் கொடுக்கற்பால தான பணத்தொகையானது எழுத்திலான சட்டம் எதனதும் நோக்கங்களுக்காக, அவரது கூலியின் பாகமாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க தொழில்தருநர் அத்தகைய வேலையாளின் கூலியைக் கொடுக்கவேண்டிய காலத்தினுள் அத்தகைய பணத்தொகையைக் கொடுத்தலும் வேண்டும்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தாறும் ஆண்டு சனவரி 1 ஆந் தேதிக்கு நேரே முன்னர் தொழில் தருநர் எவராலும் ஏதேனும் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு வேலையாளும், அத்தகைய தொழில்தருநரின் வேலையாளாகத் தொடர்ந்திருக்கும் அவ்வளவு காலம்வரை, 1976 சனவரி 1 ஆந் தேதிக்கு முற்போந்த நாளன்று அத்தகைய வேலையாள் துய்த்த வேதனம், படி அல்லது பணத்திலான ஏனைய கொடுப் பனவுகளிலும் பார்க்க, (அவை எப்பெயர் கொண்டு அல்லது குறிப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படினுஞ்சரி) வாய்ப்புக் குறைந்தனவல்லாத வேதனம், படி அல்லது ஏனைய பணக்கொடுப்பனவுகள் தொடர்பான அத்தகைய நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றின்மீது அத்தகைய தொழில்தருநரால் அவ்வாறு தொடர்ந்து வேலைக்கமர்த் தப்படல் வேண்டும் ; இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கொடுக்கற்பாலதான படியானது அத்தகைய வேதனம், படி அல்லது ஏனைய கொடுப்பனவுகளைவிட மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

8. நான்காம் ஒழுங்குவிதியின்கீழ் வேலையாள் ஒருவருக்குக் கொடுக்கற்பாலனவான எவையேனும் பணத் தொகைகளைத் தொழில்தருநர் ஒருவர் அவ்வேலையாளுக்குக் கொடுக்கத் தவறியமை காரணமான தவறொன்றுக்கு அத்தகைய தொழில்தருநர் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவிடத்து, அத்தகைய தவறுக்கென நீதிமன்றம் விதித்திருக்கக்கூடிய வேறேதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, கட்டளையிற் குறித்துரைக் கப்படும் அத்தகைய காலத்தினுள் அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய பணத்தொகையைக் கொடுக்கும்படி நீதிமன்றமானது அத்தகைய தொழில்தருநருக்குக் கட்டளையிடலாம். அத்தகைய பணத்தொகை அவ்வாறு கொடுக் கப்படாவிடின் அப்பணம் நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போல நீதிமன்றக் கட்டளை மூலம் அத்தகைய பணத்தொகை அறவிடப்படலாம்.

9. இவ்வொழுங்குவிதிகளில், சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"ஆணையாளர்", "தொழில்தருநர்", "கூலி" என்பன, முறையே (136 ஆம் அத்தியாயமான) சம்பள நிருணயச் சபைக் கட்டளைச்சட்டத்தில் உள்ள அதே பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கூட்டு உடன்படிக்கை" என்பது, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்திலுள்ள அதே பொருளையுடைய தாதல் வேண்டும் ;

" கூட்டுறவுச் சங்கம் " என்பது, 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றெனப் பொருளாகும் ;

" சம்பாத்தியம் " என்பது, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதியச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டதாயிருத்தல் வேண்டும் ;

" தொழில் " என்பது, தொழில்தருநர் ஒருவரால் அல்லது வேலையாள் ஒருவரால் கொண்டு நடாத்தப்படும், புரியப்படும் அல்லது செய்யப்படும் கைத்தொழில், வியாபாரம், பொறுப்புமுயற்சி, செய்தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் எதையும் உள்ளடக்குவதோடு, ஏதேனும் தொழிலின் பிரிவையும் அல்லது அதிலுள்ள ஏதேனும் பணியையும், அல்லது செய்முறையையும் உட்படுத்தும் ; ஆனால் தொழில்தருநர் என்ற தன்மையில் மூலதனம் முழுவதும் அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவினால் கொண்டு நடாத்தப்படும், அல்லது முக்கியமாக, பாலியத் தவறாளிகளுக்கு அல்லது அநாதைகளுக்கு, அல்லது இலம்பாடுற்றவர்களுக்கும் வாய்பேசமுடியாதவர்களுக்கும், காது கேளாதவர்களுக்கும் அல்லது கண் தெரியாதவர்களுக்கும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காகக் கொண்டுநடாத்தப்படும் கைத்தொழில், வியாபாரம் அல்லது பொறுப்புமுயற்சி எதனையும் உட்படுத்தாது ;

அத்துடன்

" வேலையாள் " என்பது தொழில், கைத்தொழில், வியாபாரம், செய்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் எதிலும் வேலை எதனையும் புரிவதற்காக வாய்மொழிமூலமாக, எழுத்துமூலமாக, வெளிப்படையாக அல்லது உட்கிடையாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் வேலைக்கமர்த்தப்பட்ட ஆள் ஒருவர் எனப் பொருள்படும் என்பதுடன், எவ்வேலையாளின் வேதனம் அல்லது கூலி, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறுவிதத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதோ அவ்வேலையாள் ஒருவரையும், துண்டு–வீத அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாள் ஒருவரையும் உள்ளடக்கும் ; ஆனால் அது, வீட்டு வேலையாளொருவரை அல்லது தொழில்தருநரின் சொந்தக் கார்ச் சாரதியை உட்படுத்தாது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.